ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1846/18 - 2014 ජනවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2014.01.21
*1846/18 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978(X).*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும், PB 148 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான கம்பனியொன்றாகவுள்ள சனச கம்பஸ் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும் இதற்கான II ஆம் அட்டவணையின் I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டவையும், அவற்றின் சுருக்கீடுகள் முறையே II ஆம் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ளவையுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற, அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கங்களுக்காகப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக சனச கம்பஸ் லிமிட்டெட்டை ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை - I**

ஏற்புடையற்பாலதான நிபந்தனை

*சனச கம்பஸ் லிமிட்டெட் ஆனது, பட்டமளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட திகதியிலிருந்து முதல் ஆறு மாதங்கள் பூர்த்தி செய்யப்படுமுன்னர், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாகவுள்ள உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-*

*(1) ஒரு பாடச் சிறப்பறிஞர்கள் குழாத்தினால் பரிசோதனை செய்யப்பட்ட, இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான ஒவ்வொரு விசேட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினதும் கற்கை நெறி உள்ளடக்கங்கள், திட்ட மதிப்புப் பெறுமதிகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் என்பனவுட்பட பூர்த்தி செய்யப்பட்ட கற்கைநெறி அமைப்பு*

*(2) துணை விதிகளும் உள்ளகத் தர உத்தரவாத அமைப்பு முறையும்*

*(3) அபிவிருத்தி செய்யப்பட்ட பாடத் தகுதி நிர்ணயக் கூற்றுக்கள்*

*(4) மாணவரை மையப்படுத்திய கற்கையைப் போதனா - கற்கை நடைமுறையினுள் இணைத்தல் தொடர்பாக, அதற்கான ஆசிரியர் பயிற்சியுட்பட்ட சான்று.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை - II**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | பட்டங்களுக்கான சுருக்கீடுகள் |
| வங்கித் தொழில் மற்றும் நிதியியல் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம் | BSc (Sp) வங்கித்தொழில் மற்றும் நிதியியல் |
| காப்புறுதி மற்றும் அபாய முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம் | BSc (Sp) காப்புறுதி மற்றும் அபாய முகாமைத்துவம் |
| பிராந்திய விஞ்ஞானம் மற்றும் திட்டமிடலில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம் | BSc (Sp) பிராந்திய விஞ்ஞானம் மற்றும் திட்டமிடல் |

திசாநாயக்கா முதியன்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்கா,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2014, சனவரி 21.

2-41

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.